# முதுகலை இரண்டாமாண்டு தமிழ் இலக்கியம்

# இலக்கண மரபு 18MTA42C

முனைவர் ப. ரமேஷ்

பாடத்திட்டம்

கூறு: 3

நிகண்டுகள்- அமைப்பு முறை – சூடாமணி நிகண்டு – பல்வேறு நிகண்டுகள்

# கூறு: 3.1. நிகண்டுகள்

- நிகண்டு- நற்றிணை 382 ஆம் பாடலின் ஆசிரியர் – நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார்
- நிகண்டு நூல் இயற்றியிருக்கலாம் – சுந்தரசண்முகனார்
- நிகண்டன் – நிர்க்கந்தன் என்ற வடசொல் வடிவம்
- நிகண்டவாதப் பிரிவைச் சேர்ந்த சைனன் என்று பொருள்படும் – மு. அருணாசலம்

# மு. அருணாசலம் கருத்து

- ஒன்பதாம் நூற்றாண்டு திவாகரம் முன்பே நிகண்டுகள் இருந்திருக்கலாம்.
- களவியல் உரை குறிப்பிடுகின்ற நிகண்டு
- யாப்பருங்கலவிருத்திக் குறிப்புகள்,
- யாப்பருங்கல விருத்தி உரைகாரர் திரிசொல்லிற்குக் காட்டும் மேற்கோள் நூற்பா,
- பாரதவெண்பாவில் பெருந்தேவனார் அக்குரோணிக்குக் காட்டும் நூற்பா
- இளம்பூரணர் உரையில் காட்டப்படும் நூற்பாக்கள் இவையாவும் முற்பட்ட நிகண்டு நூற்பாக்கள் – மு. அருணாசலம்

# ஆதி திவாகரம் – சேந்தன் திவாகரம்

- ஆதி திவாகரம் – சேந்தன் திவாகரம் ஒன்றாக இருக்கமுடியாது. இரண்டும் வேறு வேறு . சுந்தர சண்முகனார், அருணாசலம்
- நிகண்டுகள் தோன்ற காரணங்கள்
- 1. சோழ மன்னர்களின் அரசதிகார ஆதிக்கம்
- 2. சோழர்களின் வீழ்ச்சியும், மகமதியர்கள், தெலுங்க அரசர்களின் வலிமையும்
- பிறமொழி மக்களுடன் தமிழ் மக்கள் கலந்து உறவாடுதல்

# வ. ஜெயதேவன்

- தொல்காப்பியத்திற்கு பின் தமிழ் இலக்கியத்தில் பல மாறுதல்கள். செய்யுள் நடையிலும் கவிதைப் பண்பிலும்
- நிகண்டு தோன்றுவதற்கு காரணம்

- அரசியல், சமய, சமுதாயக் காரணங்களிலும் காரணம்
- களப்பிர்ர் காலம்
- சமண. பௌத்த மதச் செல்வாக்கு
- வடமொழிக் கல்வி
- பல்லவர் காலத்தில் வடமொழி நூல்கள் தமிழில் புகுந்தன்

# மா. இராசமாணிக்கனார்

- தமிழ் யாப்பிலக்கண முறையில் வடமொழிக் கலப்பு
- பல்லவர் காலம்
- கி.பி.II நூ. தொடக்கத்தில் அமிதசாகரரின் யாப்பருங்கல விருத்தியுரை

- சங்க காலத்தில் வடமொழி கலப்பு
- சங்க மருவிய காலம் – வடமொழி கலப்பு மிகுதி
- மணிமேகலையில் பௌத்த சமய கலைச்சொற்கள்
- அரசியல் மதம். இலக்கியப்படைப்பு சொற்றொகுதி எனப் பல காரணங்கள்.

# நிகண்டு சொல் மூலம்

- நிகண்டு – வடமொழி வேதத்திற்கு பொருள் சொல்லும் நூலின் பெயர்
- பின் சொற்பொருளுணர்த்தும் நூல்கட்கெல்லாம் இப்பெயர் ஏற்பட்டது – எஸ். வையாபுரிப் பிள்ளை
- நிகண்டு – nighantu – செ. ப. அகராதி
- வடமொழி நிருக்கத்தின் மூன்று காண்டங்களில் (நைகண்டுகம், நைகமம், தைவதம் என்பன) நைகண்டுகம் என்பதே நிகண்டாகும் – மு. அருணாசலம்

- புராணம், பிரபந்தம் போன்று நிகண்டு என்னும் வடமொழிப் பெயர்தான் –
- யாப்பு நெறியில் சொற்பொருள் கூறும் தமிழ் நூல்கள் நிகண்டு என்னும் பொதுப் பெயரால் வழங்கப்படுகின்றன. -வ. ஜெயதேவன்.

- சொற்கள் நீளத் தொடர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும் நூல் – நிகண்டு
- பட்டியல் போல நீளத்தொடர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும் நூல் நிகண்டு – சுந்தரசண்முகனார்

- வடமொழியல் நிகண்டு – தொகுதி, கூட்டம் எனப்பொருள்
- எனவே நிகண்டு வடச்சொல்தான்
- வேதநூல்களை  அறிந்து கொள்ள அறுவகை கருவிநூல்கள்
- 1. ஒலிப்புமுறை பற்றியதான சிட்சை(
- 2. யாப்பு பற்றியதான சந்தசு
- 3. சொற்பிறப்பு, சொல்மூலம், பற்றிய நிருத்தம்
- 4. இலக்கணம் பற்றியதான வியாகரணம்
- 5. சுருதி ஸ்மிருதிகள் கூறம் கருமம் பற்றிய செயல் விளக்கமுறை கூறும் கற்பம்
- 6. சோதிடம் என்பன
- நிருத்தம் என்பது நிகண்டோடு தொடர்புடையது.
- நிருத்தம் என்றால் வழக்கில் இல்லாதது
- வேதநூலுக்கு பொருள் சொல்லும் நூல் நிருத்தம்.

- கிமு. 5 ஆம் நூற்றாண்டு யாஸ்கர் நிறுத்தம் 1. நைகண்டுகம், 2. நைகமம் 3. தைவதம் என மூன்று காண்டங்கள் உடையது.
- முதலாவதில் – ஒருபொருட் பல சொற்களின் தொகுதி
- இரண்டாவதில் -ஒரு சொல்லின் பல்வேறு பொருட்கள்
- மூன்றாவதில் – வைதிக தேவதை பற்றிய ஆராய்ச்சி
- எனவே நிகண்டு என்பது நைகண்டுகம் என்ற சொல்லிருந்து பிறந்தது.
- கிமு 5 ஆம் நூற்றாண்டின் வழக்கம் கிபி 9 நூ. தமிழ் நிகண்டுகளில் பின்பற்றது.

# 3.2.நிகண்டுகள் -அமைப்பு முறை

- நிகண்டுகள் அகராதி அமைப்புடையன அல்ல
- பலவகைப் பொருட்புல வகைப்பாடு (Semantic Field) உடையன
- ஒருபொருட் பலசொற்கள் அனைத்தும் பொருட்புல அடிப்படையில் திரட்டப்பட்டுள்ளன.

# யாஸ்கர் நிருத்தம் கிமு.6

- யாஸ்கர் நிருத்தம் முதலாவது காண்டத்தில் மூன்று பகுதிகள் –
- முதலாவதில் பூமி. காற்று நீர், மேகம், விடியல், பகல், இரவு போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன
- இரண்டாவது பகுதியில் மனிதம், மனித உறுப்பு, மனிதருடன் தொடர்புடைய செல்வம், உடைமை, போர் போன்ற சொற்களின் ஒருபொருட் பலசொற்கள்
- மூன்றாவது பகுதியில் குணம் பற்றிய ஒருபொருட் பலசொற்கள் உள்ளன.

# கி.பி. ஆறாம் நூற்றாண்டு – அமரகோசம்

- முதல்காண்டம் (சுவர்காதி காண்டம்) நட்சத்திரம்,காலம், சொல், மொழி, ஒலி, இசை, நடனம், கடல், நீர், கப்பல், ஆறு போன்றன
- இரண்டாவது காண்டம் (பூமியாதி காண்டம்) நிலம், நகர், மலை, காடு, தாவரம், விலங்கு, மஞ்சள், உறவுப்பெயர், வருணம், தொழில் என்பன.
- மூன்றாவது காண்டம் - பல்பொருட்சொல், தொகைப்பெயர்
- ஒருபொருட் பலசொற்கள், பலபொருட் சொற்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

# முதல் நிகண்டு திவாகரம்

- பன்னிரண்டு தொகுதி
- 1. தெய்வப்பெயர்த் தொகுதி
- 2. மக்கட்பெயர்த் தொகுதி
- 3. விலங்கின் பெயர்த் தொகுதி
- 4. மரப்பெயர்த் தொகுதி
- 5. இடப்பெயர்த் தொகுதி
- 6. பல்பொருள் பெயர்த் தொகுதி
- 7. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி
- 8. பண்பு பற்றிய பெயர்த் தொகுதி
- 9. செயல் பற்றிய பெயர்த்தொகுதி
- 10. ஒலி பற்றிய பெயர்த் தொகுதி
- 11. ஒருசொல் பல்பொருள் பெயர்த்தொகுதி
- 12. பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி

# பன்னிரெண்டு தொகுதிகளையும்

- சொற்பொருள் உறவு அடிப்படையில்
- ஒருபொருட் பலசொல் தொகுதி (1-10)
- பல்பொருட் பெயர்த்தொகுதி (11)
- தொகுதிப் பெயர்த் தொகுதி (12)

# முதல் பத்துத் தொகுதியில்

- தெய்வப்பெயர் பற்றிய தொகுதி -எவ்வித வரிசை முறையும் பின்பற்றபடவில்லை.
- எ.கா. ஒற்றைக்கொம்பன் விநாயகன் ஐங்கரன் வெற்றியாணை முகவன் கணபதி பாசாங்குசதரன் ஆகுவாகன்னே
- சிலவற்றிற்குப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளன.
- எழுவகை பெண்டிர், ஐவகை உலோகம், பதினான்கு வகை நிதியம், ஏழிசை எனத் தொகுதிப் பெயர்கள்
- ஒலி பற்றிய பெயர்த்தொகுதியில் நூற்பா. ஒத்து, படலம், உயர்மொழிக்காஞ்சி, முதுமொழிக் காஞ்சி, முதுபாலை, பாசறை முல்லை, வள்ளைப்பாட்டு
- ஒருபொருட்பல சொற்றொகுதி தான் பெரும்பாலும் உள்ளன.

# பதினொன்றாம் தொகுதியில்

- ஒரு சொல்லின் பல பொருட்கள்
- மாவே பெருமையும் கருமையும் சூதமும்
மேவிய நாற்கால் உடையவும் வண்டும்
பூவுறை திருவென ஆறையும் பொருந்தும்
- பெருமை, கருமை, சூதம்(மாமரம்) விலங்கு, வண்டு, திருமகள் என் ஆறு பொருள்
- வெளிப்படையான பொருள் விளக்கமில்
- இந்நிகண்டுகளைப் பயன்படுத்திக்கொள்ள பயிற்சி அவசியம்
- கீதமும் நிறமும் செந்சிறக்கெழுவும்
ஆதரவும் முடுகியலும் இராக மெனப்படுமே
- பொருட்குரிய சொல் வரிசை முறை கடைப்பிடிக்கப்படவில்லை. தொடக்கத்திலோ அல்லது இறுதியில் இடம்பெற்றுள்ளது.

# பன்னிரண்டாம் தொகுதியில்

- பல்பொருள்கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியில்
- ஒருமை, இருமை, மும்மை, மும்மலம், நாற்பொருள், ஐயறிவு, அறுதொழில், எழுபிறப்பு, ஏழிசை, எண்குணம் எனத் தொகுதிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன.
- மெய் வாய் கண் மூக்கு செவி ஐம்பொறியே
- அறுசுவை தித்தித்தல் புளித்தல் கைத்தல் மறுவறு துவர்த்தல் கூர்த்தல் காழ்த்தல்

# பிங்கல நிகண்டு

- 1. வான்வகை
- 2. வாணவர்வகை
- 3. ஐயர்வகை
- 4. அவனிவகை
- 5. ஆடவர் வகை
- 6. அநுபோகவகை
- 7. பண்பிற்செயலின் பகுதிவகை
- 8. மாப்பெயர் வகை
- 9.மரப்பெயர்வகை
- 10.ஒருசொல் பல்பொருள் வகை

- தொகுதி என்ற பெயர் வகை என மாறியுள்ளது.
- திவாகரத்தின் 8,9 ஆம் தொகுதி ஒரே தொகுதியாக பண்பிற்செயலின் பகுதிவகை எனத் தரப்பட்டுள்ளன.
- பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி தனியே அமைக்கப்படவில்லை. அச்சொற்கள் பெரும்பாலும் ஐயர்வகையுள் தரப்பட்டுள்ளன.

- மணிநீர் பொன்பூ மண்கற் றீயென்
றெழுவகை மேகம் பொழிமாரி யேழே – வான் வகை
- காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் முதுவேனி லென்றாங்
கிருமூன் றுவகைப் பருவந்தானே – வானவர்வகை
தமனிய மிரும்பு தாமிரமீய
மிரசிதம் பஞ்ச லோக மென்ப - அநுபோகவகை

# உட்பிரிவுகள் - அநுபோவகையில்

- பொருட் பாகுபாட்டில் பல உட்பிரிவுகள்
- அநுபோகவகை –

- 1. உணவின்வகை
- 2. பூணின்வகை
- 3. இரத்தினவகை
- 4. உலோகவகை
- 5. ஆடைவகை
- 6. பூச்சு வகை
- 7.சூட்டுவகை
- 8. இயல்வகை
- 9. இசைவகை
- 10. நாடகவகை
- 11. மண்டிலவகை
- 12. படைவகை
- 13. காலாள்வகை
- 14.தோற்கருவிவகை
- 15. குடைவகை
- 16. ஆயுதவகை
- 17. செயற்கைவகை
- 18. அக்குரோணி வகை
- 19. வெள்ளவகை
- 20. இல்லணி வகை

# பண்பின்செயலின் வகையில்

- 1. உள்ளநல்வகை
- 2. உள்ளத்தின் தீயவகை
- 3.மெய்வகை
- 4. வாய்வகை
- 5. கண்வகை
- 6. மூக்கின்வகை
- 7.செவிவகை
- 8. கைவகை
- 9.கால்வகை
- 10. முறைமைவகை
- 11. அளவின் வகை
- 12. காரணவகை, பல்பொருள்வை

# மரப்பெயர்வகையில்

- 1.புள்வகை
- 2. விலங்கின் வகை
- 3. பாம்பின் வகை
- 4. சலசரவகை
- உட்பாகுபாடுகளும் வகை என்றே குறிப்பிடப்பட்டுள்ளன.
- திவாகரத்தைக் காட்டிலும் எளிமையானது
- பயன்பாட்டு எளிமை நோக்கில் பொருட்புல் வகை அமைந்துள்ளது.

# நாமதீப நிகண்டு -நான்கு படலங்கள்

- பொருட்புல வகைப் பாட்டினின்றும் வேறுபட்டுப் புதியதொரு வகைப்பாடு
- 1.உயர்திணைப்படலம்
- 2.அஃறிணையுயிர்ப் பொருட்படலம்
- 3.அஃறிணையுயிரில் பொருட்படலம்
- 4.குணநாமப்படலம்
- உட்பிரிவுகள் வர்க்கம் எனப்பெயர்

- 1.உயர்திணைப்படலம் -இரண்டு உட்பிரீவு
  - தெய்வவர்க்கம்
  - மானிடவர்க்கம்
- 2.அஃறிணைப் படலம் ஐந்து உட்பிரிவு
  - நாற்கால் உயிர்ப்பொருள் வர்க்கம்
  - பறவை உயிர்ப்பொருள் வர்க்கம்
  - ஊர்உயிர்ப்பொருள் வர்க்கம்
  - நீர்வாழ் உயிரப்பொருள் வர்க்கம்
  - தாவர உயிர்ப்பொருள் வர்க்கம்

- 3.அஃறிணையுயிரில் பொருட்படலம் - ஐந்து உட்பிரிவு
  - 1.இயற்கை,
  - 2.செயற்கை,
  - 3.இடம்,
  - 4.காலம்,
  - 5.சினை
- 4.குணநாமப் படலம் நான்கு உட்பிரிவு
  - 1.உயிர்ப்பொருள் மனக்குணவர்க்கம்
  - 2.உயிர்ப்பொருள் வாக்குக்குணவர்க்கம்
  - 3.உயிர்ப்பொருள் செயற்குணவர்க்கம்
  - 4.உயிரில் பொருள் குணவர்க்கம்

# 3.3. சூடாமணி நிகண்டு

- மண்டலபுருடர்
- 16 ஆம் நூ.
- விருத்தப்பா
- 11,000 சொற்கள்
- 1,197 விருத்தப்பாக்கள்
- 12 தொகுதி
- முதல்தொகுதி – தேவப்பெயர்த்தொகுதி
- 11 ஆம் தொகுதியில் ககர எதுகை முதல் னகர எதுகை வரை பதினெட்டு எதுகையில் சொற்கள்

# 3.4. பிற நிகண்டுகள் – 1.சேந்தன் திவாகரம்

- காலத்தால் முற்பட்டது
- கி.பி.8 நூ. (எஸ்.வை. சுந்தரசண்.)
- கிபி. 9 .நூ ((மு.அரு., செ.வை சண்
- திவாகரர்
- வள்ளல் சேந்தன் பெயரையும்
- நூற்பா நடை
- 9500 சொற்கள்
- 12 தொகுதிகள்
- முதல் பத்துத் தொகுதிகள் 1835 தாண்டவராய முதலியால் வெளி. (எஸ்.வை)
- 1839 இல் வெளி. (வ. ஜெயதேவன்)

# 3.4. பிற நிகண்டுகள் – 2.பிங்கலந்தை

- பிங்கலமுனிவர்
- 8 ஆம் நூ. (சுந்தரசண்முகனார்)
- 10 ஆம் நூ ((மு.அருணா)
- பத்துத் தொகுதிகள்
- முதல் ஒன்பது தொகுதியில் 14700 சொற்கள்
- சூடாமணி, சேந்தன் திவாகரம் ஆகியவற்றிற்கு முந்தியது - கருத்து
- திவாகரரின் மகன்
- 1890 முதல் பதிப்பு

# 3.4. பிற நிகண்டுகள் - 3.அகராதி நிகண்டு

- சிதம்பரரேவணசித்தர்
- 1594 இல்
- நூற்பா நடை
- 3358 நூற்பா
- ஒருபொருட் பலசொல் நிகண்டு
- முதலெழுத்து அடிப்படையில்
- 10 தொகுதிகள்

- 1. அகராதிப் பேர்த்தொகுதி
- 2.ககராதிப் பேர்த்தொகுதி
- 3.சகராதிப் பேர்த் தொகுதி
- 4.ஞகராதிப் பேர்த்தொகுதி
- 5.தகராதிப் பேர்த்தொகுதி
- 6.நகராதிப் பேர்த்தொகுதி
- 7.பகராதிப் பேர்த்தொகுதி
- 8.மகராதிப் பேர்த்தொகுதி
- 9.யகராதிப் பேர்த்தொகுதி
- 10வகராதிப் பேர்த்தொகுதி

- அகராதிப் பேர்த்தொகுதியில்  அ முதல் ஔ வரை
- வகராதிப் பேர்த்தொகுதியில் – வ முதல் வௌ வரை
- சொற்கள் திரட்டித் தரப்பட்டுள்ளன.
- பலவகையான சொற்கள் இடம்பெற்றுள்ளன
- சங்க இலக்கியம், அவற்றின் உரை, பிற்கால‌த் தமிழிலக்கியங்களில் உள்ள சொற்கள், உலகவழக்குச் சொற்கள், வடமொழி, தெலுங்கு, கன்னடம் சொற்களும் இடம்பெற்றுள்ளன.

# 3.4. பிற நிகண்டுகள் – 4.உரிச்சொல் நிகண்டு

- காங்கேயர்
- கிபி.11நூ. (மு.அருணா)
- கிபி. 1600  என்ற கருத்துமுண்டு
- 287 வெண்பா
- 3200 சொற்கள்
- 12 தொகுதிகள் அல்லது 10 தொகுதிகள்
- பின்னிரு தொகுதிகள் பின்னாளில் சேர்க்கப்பட்டவை என்ற கருத்து உண்டு
- முதற்பதிப்பு 1840

# 3.4. பிற நிகண்டுகள் – 5.கயாதரம்

- கயாதரம்
- கி.பி. 17 நூ (எஸ்.வை)
- 556 கட்டளைக் கலித்துறை
- 11350 சொற்கள்
- பதினொரு தொகுதிகள்
- இயல்
- பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி இல்லை
- தெய்வப்பெயரியல், இடப்பெயரியல், மக்கள் பெயரியல் எனக்குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3.4. பிற நிகண்டுகள் – 6.பல்பொருள் சூளாமணி நிகண்டு

- ஈசுரபாரதியார்
- கி.பி.1700
- விருத்தப்பா
- 4265 சொற்கள்
- மூன்று காண்டங்கள்
- முதலெழுத்தளவில் மட்டுமே அகரநிரல்
- 1. ஒருசொல் ஒருபெயர்க்காண்டம்
  - பல்பொருட் சொற்கள்
- 2.ஒருசொல் பல்பெயர்க்காண்டம்
  - பல்பொருட் சொற்கள்
- 3. பல்பெயர்க் கூட்டத்து ஒருபெயர்க் காண்டம்
  - தொகுதிப்பெயர்கள்

# 3.4. பிற நிகண்டுகள் – 7.கைலாச நிகண்டு சூடாமணி

- கைலாசர்
- நூற்பா நடை
- கி.பி. 17 நூ
- பிங்கல நிகண்டைப் போல் தொகுதிகள் அமைந்துள்ளன.
- வானவர் வகை, ஐயர் வகை
  - 56 பிரிவுகள் -49 பிரிவுகளில் ஒருபொருட் பல சொற்களின் பிரிவுகள்
  - 7 பிரிவுகள் பலபொருட் சொற்கள் இடம்பெற்றுள்ளன.
  - எழுத்தெண்ணிக்கை அடிப்படையில்
  - ஓரெழுத்தொரு மொழி
  - ஓரெழுத்தொற்றொருமொழி
  - ஈரெழுத்தொருமொழி
  - ஈரெழுத்தொற்றொருமொழி
  - மூவெழுத்தொருமொழி
  - மூவெழுத்தொற்றொருமொழி
  - நாலெழுத்தொருமொழி

# 3.4. பிற நிகண்டுகள் –
# 8.அரும்பொருள் விளக்க நிகண்டு

- அருமருந்தைய தேசிகர்
- கிபி.18 நூ
- 700 விருத்தப்பா
- 3200 சொற்கள்
- பல்பொருட்கள் விளக்கம்
- ககரம் முதல் னகரம்  பதினெட்டு எழுத்துகளுக்கும் ககர எதுகை ஙகர எதுகை, சகர எதுகை, னகர எதுகை என பதினெட்டுத் தொகுதிகள்